# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590


**ஆணை நாள் – 03.04.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். SA 10171/SCIC/2023

திரு ரா. சீனிவாசன் த/பெ.ராஜப்பன் — மேல்முறையீட்டாளர்
க.எண்.2/105 A, கங்கசந்திரம்
குருபரப்பள்ளி அஞ்சல்
கிருஷ்ணகிரி வட்டம் (ம) மாவட்டம்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம் .... பொது அதிகார அமைப்பு
கிருஷ்ணகிரி.

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 11/03/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ வருவாய் வட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி வட்டம் (ம) மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், வேப்பனபள்ளி ஒன்றியம், போலுபள்ளி 65, கிராம நிர்வாக அலுவலகம் RTI 2005 2(J)-ல் கள ஆய்வு செய்து VAO போலுவள்ளி அலுவலகத்தில் பராமரிக்கப்படும் அனைத்து ஆவணங்கள் (ம) பதிவேடுகள் அனைத்தும் ஆய்வு செய்து தேவைப்படும் ஆவணங்களை எனது சொந்த செலவில் நகலெடுத்து அதனை தங்களின்அலுவலக முத்திரை (ம) சான்றொப்பமிட்டு வழங்க வேண்டுகிறேன் ” என்பன போன்று 8 (எட்டு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

2. பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 28/04/2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலர்/வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி அவர்கள் மனுதாரருக்கு மூ.மு.2876/2023/அ2, நாள் 15/05/2023 தேதியிட்டு தகவல்களை அனுப்பியுள்ளார்.

3. அதன் பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் 07/06/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 10171/SCIC/2023 ஆக பதிவு செய்தது. பொதுத் தகவல் அலுவலர்/தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கிருஷ்ணகிரி அவர்கள் மனுதாரருக்கு மூ.மு.2876/2024/அ2, நாள் 07/11/2024 வாயிலாக மனுதாரருக்கு தகவல் அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர் 24/12/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை கடிதம் அனுப்பியுள்ளார்.

4. இந்நிலையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின்மீது காணொளி காட்சி மூலம் விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 03/04/2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய காணொளி காட்சி விசாரணைக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆஜராகுமாறு மனுதாரருக்கும், ஆணையத்தின் முன் நேரடியாக ஆஜராகுமாறு பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

**5. இன்றைய காணொளி காட்சி விசாரணையில் மனுதாரர் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து கலந்து கொண்டார். விசாரணைக்கு ஆணையத்தின் முன் பொது அதிகார அமைப்பின் சார்பில், திருமதி/செல்வி ச.வசந்தி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கிருஷ்ணகிரி வட்டம் (ம) மாவட்டம் அவர்கள் ஆஜரானார். ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் 11/03/2023 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு எவ்வித தகவலையும் மனுதாரருக்கு வழங்கவில்லை எனத் தெரிய வருகிறது. அதற்கு, தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் தெரிவிக்கையில், 11/03/2023 தேதியில் பொதுத் தகவல் அலுவலர் பணியிடம் காலியாக இருந்த காரணத்தினால், மனுதாரருக்கு தகவல் வழங்க இயலவில்லை எனத் தெரிவித்தார். அதனை ஆணையம் ஏற்கிறது.**

**6. அதன் பின்னர், மேல்முறையீட்டு அலுவலர்/வட்டாட்சியர், கிருஷ்ணகிரி அவர்கள் 15/05/2023 தேதியிட்டு மனுதாரருக்கு அனுப்பிய கடிதத்தில், மனுதாரர், கட்டணம் செலுத்தி கள ஆய்வு செய்ய அனுமதி வழங்கியுள்ளார். அதற்கு மனுதாரர், மேற்குறிப்பிட்ட தகவல் 30 நாட்களுக்குள் வழங்கப்படவில்லை என்றும் மேலும், காலதாமதான முறையில் தகவல் அளித்த பின்னர், கள ஆய்வு மேற்கொள்ள கட்டணம் செலுத்த வேண்டுமென்று கூறியதையும் மனுதாரர் ஏற்கவில்லை. மனுதாரரின் முறையீட்டினை ஆணையம் ஏற்கிறது. மனுதாரரை, தற்போது கள ஆய்வு செய்ய விருப்பமுள்ளவராக இருக்கிறீர்களா ? என ஆணையம் வினவிய போது, மனுதாரர், தான் தற்போது கள ஆய்வு செய்வதற்கான சூழல் இல்லை எனத் தெரிவித்தார்.**

**7. மனுதாரருக்கு மிகவும் காலதாமதத்துடன் தகவல் வழங்கப்பட்டிருப்பதோடு, கள ஆய்வு செய்வதற்கு கட்டணம் செலுத்த வேண்டுமென்ற தவறான தகவல் அளித்திருப்பதை ஆணையம் ஏற்கவில்லை. எனவே, பொது அதிகார அமைப்பு மனுதாரருக்கு இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் ரூ.5,000/- (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) ஐ இழப்பீடாக வழங்கிவிட்டு, அதன் பின்னர் மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய தொகை பெற்றுக் கொண்டதற்கான இரசீதின் நகலை 29/05/2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

## <u>வழக்கு எண். SA 10171/SCIC/2023</u>

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
கிருஷ்ணகிரி.

**மேல்முறையீட்டாளர்**
திரு ரா. சீனிவாசன் த/பெ.ராஜப்பன்
க.எண்.2/105 A, கங்கசந்திரம்
குருபரப்பள்ளி அஞ்சல்
கிருஷ்ணகிரி வட்டம் (ம) மாவட்டம்

நகல்
1.மாவட்ட ஆட்சித் தலைவர்
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்
கிருஷ்ணகிரி மாவட்டம்.

2. பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035 (for follow up)

RG/PC